பக்கங்கள்: பத்து

பொது சன நூலகம்
26 MAY 1999

Registered as a News Paper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 14 வள்ளுவர் ஆண்டு2030 வைகாசி 12 புதன்கிழமை (26-05-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 155

# மேலும் பல அரச அலுவலகங்கள் நேற்று முற்றாகச் செயல் இழப்பு!

## புலிகள் அனுப்பிய கடிதங்கள் காரணமாக

யாழ்ப்பாணம், மே 26

அரச அலுவலகங்கள் மற்றும் திணைக்களப் பணிமனைகள் போன்றவை செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இயங்கக்கூடாது என்று சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுக்கு புலிகள் அனுப்பிய கடிதங்கள் காரணமாக அரச அலுவலகங்களை மூடும் நடவடிக்கை நேற்று மேலும் விஸ்தரிக்கப்பட்டது.

புலிகளின் அறிவுறுத்தல்கடிதங்கள் காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை யாழ். செயலகம், பிரதேச செயலகங்கள் உட்பட நகரில் உள்ள முக்கிய திணைக்களங்கள் மூடப்பட்டிருந்தன.

இரண்டாவது நாளான நேற்று மேலும் பல திணைக்களங்கள் செயலிழந்தன.

சுகாதாரசேவை, தபால் சேவை, போக்குவரத்துச் சேவை மற்றும் கல்வி, உயர் கல்விச்சேவை போன்ற அத்தியாவசிய துறைகளுடன் தொடர்புடைய அலுவலகங்கள் தவிர்ந்த ஏனைய அரச அலுவலகங்கள்நேற்று பெரும்பாலும் செயல் இழந்திருந்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த கப்பல் சேவை சனியன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், மே 26

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கான — 'லங்கா முடித்த' கப்பலின் — அடுத்த சேவை எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெற விருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சேவையில் செல்ல விருப்பவர்களுக்கான டிக்கெட்டுக்கள் நாளை பிற்பகல் 1 மணி முதல் வழங்கப்படும் என்றும் —

டிக்கெட் பெற்றவர்கள் பயண ஏற்பாடுகளுடன் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்குச் சமுகம் தர வேண்டும் என்றும் —

அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பயண அனுமதி பெற்றவர்கள் வெள்ளிக்கிழமையும் டிக்கெட் பெற முடியும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

அதே நேரம் —

திருகோணமலையிலிருந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மடுவில் படையினர் மீது புலிகள் ஷெல் தாக்குதல்!

மன்னார், மே 26

மன்னார் மடுப் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள படையினர் மீது நேற்று முன்தினம் மாலை விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாக வவுனியாவில் படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

மடுப் பகுதியில் 'வலயம் — 15' பாதுகாப்பு அரண் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் —

இந்தத் தாக்குதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார் என்றும் —

மேலும் இரு கான்ஸ்டபிள்கள் காயமடைந்தனர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-164-21-3)

## கலட்டியில் மிதிவெடி இளைஞன் கால் இழந்தார்!

யாழ்ப்பாணம், மே 26

யாழ். கலட்டிச் சந்தியில் சோதனைச் சாவடிக்கு அருகில் உள்ள பாதுகாப்பு அரண் பகுதியில் நேற்று முற்பகல் 10. 30 மணியளவில் மிதிவெடி வெடித்ததில் இளைஞர் ஒருவர் தனது வலதுகாலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

வசாவிளானைச் சேர்ந்த தர்மராசா அனுராசா (வயது 17) என்பவரே கால் இழந்தவராவார்.

மேற்படி இளைஞரும் அவரது நண்பரான இன்னொருவரும் கலட்டி சோதனைச்

[9 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளின் ஆயுத கடத்தலைத் தடுக்க கம்போடியா இலங்கைக்கு உதவும்!

### அமைச்சர் கதிர்காமர் கூறுகின்றார்

கொழும்பு, மே 26

விடுதலைப் புலிகள் கப்பல் மூலம் இலங்கைக்கு ஆயுதங்கள் கடத்துவதை நிறுத்துவதற்கு உதவும்படி கம்போடிய அரசை இலங்கை அரசு கேட்டுள்ளது.

மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு கம்போடியாவுக்குச் சென்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையிலான குழு ஒன்று இத்தகைய கோரிக்கையை கம்போடியா அரச அதிகாரிகளிடம் விடுத்துள்ளது.

இந்த விடயத்தில் இலங்கைக்கு உதவுவதற்கு கம்போடியா உறுதி அளித்துள்ளது என்று அமைச்சர் கதிர்காமர் நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று முதல் மூன்று நாள்கள் அங்கு தங்கிப் பேச்சுக்கள் நடத்திய பின்னர் கதிர்காமர் தாய்லாந்து செல்வார். (உ-3-6)

### கொழும்பு உட்பட

## முக்கிய ஐந்து நகரங்கள் மீது தாக்குதல் நடத்த புலிகள் திட்டம்?

கொழும்பு, மே 26

நாட்டின் முக்கியமான ஐந்து நகரங்களில் தாக்குதல்கள் நடத்துவதற்கு புலிகள் திட்டமிட்டுள்ளதாக படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு செய்திவட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன:

கொழும்பு, கண்டி, கதிர்காமம், திருகோணமலை, நீர்கொழும்பு ஆகிய நகரங்களிலேயே தாக்குதல்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

'போர்க் கோசம் -4' நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் இந்தத் தாக்குதல்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் —

உயிரிரைப் பணயம் வைத்தாவது "போர்க் கோசம்- 4' நடவடிக்கையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று உத்தரவிட்டுள்ள புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் இதற்காக ஐந்து தலைவர்களையும் நியமித்துள்ளதாகவும் —

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## பெருமாளை விமரிசித்து சுவரொட்டிகள்

மட்டக்களப்பு, மே 26

வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாளை விமரிசனம் செய்து சுவரொட்டிகள் கிழக்கில் வெளியிடப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு -அம்பாறை பிராந்திய அரசியல் பிரிவினால்இச் சுவரொட்டிகள் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்று சமாதானப் பேரணி!

வவுனியா, மே 26

வவுனியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சர்வமதக் குழுவினர் நேற்று வவுனியா நகரில் சமாதானப் பேரணி ஒன்றை நடத்தினர்.

பஸ் நிலையத்தில் ஆரம்பமான பேரணியில் குழுவில் அங்கம் வகிக்கும் நூறு பிக்குகளும், ஏனைய மதத்தலைவர்களும், பொது மக்களும், அரச அதிகாரிகளும் பங்கு பற்றினர்.

பேரணி முடிவில் போதி தக்ஷண விகாரையில் சமாதானக் கூட்டம் ஒன்றும் இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தில் அங்கிலிக்கன் ஆயர் வண. கெனத்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## மக்களுக்கு மட்டுமே எரிபொருள் விநியோகம்

### அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், மே 26

''விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கும் ஆஸ்பத்திரி போன்ற சிவில் பணிகளுக்கும் மட்டுமே எரிபொருள் விநியோகம் செய்யப்படுகின்றது. வேறு எவருக்கும் நாம் எரிபொருள் விநியோகம் செய்வதில்லை'' — என்று பெற்றோலியம் கூட்டுஸ்தாபன யாழ். அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள எமது முகவர்கள் மூலமே நாம் எரிபொருள் விநியோகம் செய்து வருகிறோம் என்றும்—

வேறு எவர் மூலமும் இந்தப் பணியை செய்வதில்லை என்றும்—

அவர் மேலும் தெரிவித்தார். (உ-3-5)

## அம்பாறையில் புலிகள் தாக்குதல்!

மட்டக்களப்பு, மே 26

அம்பாறை மாவட்டத்தில் பதுளைச் சந்தியில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் விடுதலைப்புலிகள் அதிரடிப்படையினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ரோந்துப்பணியை முடித்து முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்த அதிரடிப் படையினர் மீதே பதுங்கியிருந்த புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும்—

இந்தத்தாக்குதலில் அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்றும் —

மட்டக்களப்பில் படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## இராஜகோபால் கங்கேசன்

(A/L 99 வர்த்தகப் பிரிவு மாணவன்,
கொக்குவில் இந்துக்கல்லூரி)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜகோபால் கங்கேசன் (வளர்மதி சனசமூக நிலைய பொருளாளர்) அவர்கள் 24-5-99 திங்கட்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராஜகோபால் (முன்னாள் உப- தபாலதிபர், கொக்குவில்) - ஜெயதேவி ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும் பிரதீபன் (கனடா), பகீரதி (கனடா), அபிராமி (பொறியியல்பீட மாணவி - மொரட்டுவ), சர்வேசன், சிவசங்கர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவலிங்கம் (கனடா) அவர்களின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை (27 - 5 - 99) புதியநேரம் 10. 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
இ. ஜெயதேவி
[தாய்]

சம்பியன் லேன்,
கொக்குவில்

(சி/7664)

## பொன்னம்பலம் செல்வநாதன்

பண்ணாகத்தைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் காலஞ்சென்ற செல்லப்பா பொன்னம்பலம்— தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் அம்பிகாதேவியின் அன்புக் கணவருமான செல்வநாதன் 21-05-99 அன்று சிங்கப்பூரில காலமாகிவிட்டார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. விக்கினேஸ்வரன்
(சகோதரன்)

பண்ணாகம்,
சுழிபுரம்.

(66071)

## பொன்னம்பலம் கோவிந்தர்

மூளாய் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் கோவிந்தர் அவர்கள் 25-05-1999 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற லோகாம்பிகையின் அருமைக் கணவரும் காலஞ்சென்ற அரியரட்ணம் (கூட்டுறவு வைத்தியசாலை), இரத்தினசபாபதி (இளைப்பாறிய இலிகிதர், நீர்ப்பாசனத் திணைக்களம்), தம்பிராசா (இளைப்பாறிய இலிகிதர், துறைமுக கூட்டுஸ்தாபனம்), தனலட்சுமி, தங்கம்மா, பரமநாதன் (நிர்வாக அதிகாரி, மகாராஜா நிறுவனம்), தேவநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சரோஜினிதேவி, மங்கையர்க்கரசி, சிவகங்கை, காலஞ்சென்ற சுப்பிரமணியம், ஜெகதீஸ்சந்திரன், புஷ்பராணி, மலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் மகாலிங்கசிவம், விஸ்வபட்சம் — புஷ்பராணி, மோகனராஜன்—பவானி, ஸ்ரீசண்முகநாதன்—கௌரி, பாலகுமரன்—சரோஜினிதேவி, கெதர்சினி, சிவகுமாரன், சண்முகநாதன்—நாகபூஷணி, செந்தூரன், பாலகிருஷ்ணன், ஜனார்த்தனராஜா—குமதினி, ஜெயச்சந்திரன், ஜெயக்குமார், சுபாஷினி ஆகியோரின் பேரனும் காந்தவிஸ்வன், விஜிகலா, பிரவீன், அஸ்வினி, அக்ஷி, தீபிகை, நிஷாந்தன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-05-99) புதன்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோ. இரத்தினசபாபதி
(மகன்)

மூளாய் கிழக்கு,
சுழிபுரம்.

(66086)

திருமதி
## காவேரி பொன்னையா
(கோயிலாள்)

முருகஸ்தான் துன்னாலை தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த திருமதி காவேரி பொன்னையா (கோயிலாள்) 25-05-99 அன்று காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு. பொன்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிதம்பரி, சின்னையா, வேலுப்பிள்ளை, தெய்வர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவமணிதேவி, சிவபாதம் (சிமன்ரேட் சென்ரர்), அச்சுதம்பிள்ளை (மக்கள் வங்கி திருகோணமலை), சதாசிவம் (கனடா), பர்வதகல்யாணி, உதயகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் சிவராசா, யோகமணி, ரஞ்சினி (ஆசிரியை, திருக்குடும்பக் கன்னியர் மடம்), நவரட்ணம் (ஆசிரியர், ஞானாசிரியார் கல்லூரி), சந்திரமலர் (கனடா), யோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புமாமியும் சுமதி (கனடா), சுகந்தினி, பாமினி, விமேஸ், சுகந்தரூபன், காந்தரூபன், தாரிசரூபன், மோகனரூபி, ஸ்ரீ ஜனனி, கார்த்திகா, நிரோஸ், லாவன்யா, லக்ஷன், சாளினி, சனுஜன் ஆகாஸ், அபிலாஸ், சந்திரன், நீதிராசா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் நிவேதாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேரொண்டை கரவெட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.

துன்னாலை தெற்கு,

(66089)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 26

கந்தரோடை ஸ்ரீ அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்துக்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட புதிய சப்பற வெள்ளோட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும்.

மேற்படி புதிய சப்பறத்தை கந்தரோடையூர் விஸ்வப்பிரம்ம ஸ்ரீ இ. அருணாசலம் ஆச்சாரியாரும், அவரது குழுவினரும் வடிவமைத்துள்ளனர்.

(இ-7)

★ ★ ★

அரியாலை, மே 26

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத் தேர்த்திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் சனிக்கிழமையும் இடம்பெறவுள்ளன.

(க-117

## கட்டட திறப்பு விழா

யாழ்ப்பாணம், மே 26

'பேரூட்' நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்ட தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலய கட்டடத் திறப்பு விழா அதிபர் மு. ஜெயக்குமார் தலைமையில் நாளை வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பேரூட் நிறுவன வலி மேற்கு திட்ட இணைப்பாளர் கே. குணேந்திரதாசன் பிரதம விருந்தினராகவும், வலிகாமம் கல்வி வலயத்தின் பிரிவு ஒன்றின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ் செல்லையா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(க)


ராஜா
யாழ்ப்பாணம்.
விஜயகாந்த் -கௌதமி
விஜய் -யுவராணி
மற்றும் பலர் நடித்த
செந்தூரபாண்டி
10-30, 2-30
அடுத்த வெளியீடு:
நினைத்தேன்
வந்தாய்
(சி/7615)

லிபேட்டி
தியேட்டர்
அச்சுவேலி
கார்த்திக் – கௌதமி
நடித்த
சின்னக்கண்ணம்மா
காட்சிகள்; 10 30, 2.30
(பழைய நேரப்படி)
Fax No. 070-212223
FOREIGN T.P. No.
0094 -70 -212223
(65901)

நாகம்ஸ்
சுன்னாகம்.
பிரபு - குஷ்பு
நடித்த
சின்னத்தம்பி
காட்சிகள்: 11-00, 2-30
(புதியநேரம்)
30-05-99 முதல்
ஜெய்ஹிந்த்
(66081)


உ

தென் கோவை
## கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம்
## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்
26 — 05 — 1999

கொடியேற்றம்:- வைகாசி 12 ஆம் நாள்
26- 05- 99 புதன்கிழமை பகல் 10 00 மணிக்கு
தேர்:- 09 - 06 - 99 புதன்கிழமை
காலை 9. 30 மணிக்கு
தீர்த்தம்:- 10 - 06 - 99 வியாழக்கிழமை
காலை 9. 30 மணிக்கு

### தெய்வீகப் பேருரை

தினமும் மாலை 6. 30 மணி தொடக்கம் 7. 30 மணி வரை தெய்வீகத் தொடர் சொற்பொழிவு நடைபெறும்

### நிகழ்த்துபவர்

"சிவத்தமிழ் வித்தகர்"
திரு. சிவ மகாலிங்கம்
(விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

தேவஸ்தானம்

இருபாலை, கோப்பாய்


விளம்பர அன்பளிப்பு:-
தயா நகைப் பூங்கா
தங்க வைர நகை வியாபாரம்
213 C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்
செல்வரத்தினம் தயானந்தன்
(66084)


## ஈராண்டின் நினைவலைகள்



செல்வி
## பத்மநாதன் அனுஷா

அன்னைமடியில் 04 – 08 – 1971
இறைவன் அடியில் 19—05 – 1997

திதி: துவாதசி

அன்புத் தெய்வம் அனுஷாவே
எம்மை விட்டு நீரகன்று
ஈராண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எம்மனதில்
நூறாண்டு வாழுமம்மா!

பிரிவால் துயருறும்
பெற்றோர். சகோதரர்கள்,
மைத்துனி, உறவினர்கள்

22/6, விதானையார் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(சி/7658)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின்
முன்னாள் தொலைபேசி இயக்குனரான
ஈசா (சர்வேசன்)
அவர்களின் அன்புச் சகோதரன்

### இராஜகோபால் கங்கேசன்

[கொக்குவில் இந்துக் கல்லூரி
உயர்தர வகுப்பு மாணவன்]

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்;
லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ் அன்
கொமினிக்கேசன்
(யாழ்ப்பாணம்)

(சி/7665)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோனியா மீண்டும் பதவி ஏற்றது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதே!

## சரத்பவார் கூறுகிறார்

புதுடில்லி, மே 26
சோனியா காந்தி மீண்டும் காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவியை ஏற்றது நாம் எதிர்பார்த்த ஒன்றுதான்.

அண்மையில் காங்கிரஸில் இருந்து நீக்கப்பட்ட சரத்பவார் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சரத்பவார், பி.ஏ.சங்மா, தாரிக் அன்வர் ஆகிய மூவரும் புதிய கட்சி அமைக்க இருப்பது தெரிந்ததே.

நாட்டின் தலைமைப் பொறுப்பை ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தலைமுறை தலைமுறையாக வகிப்பதைத் தாம் எதிர்ப்பதாக பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சோனியா காந்தி தமது இராஜினாமாவை விலக்கிக் கொண்டது ஒரு நாடகத்தை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கின்றது என்று பாரதீய ஜனதாக் கட்சித் துணைத் தலைவர் ஜே.பி. மாத்தூர் கூறியுள்ளார்.

சோனியாவைப் பிரதமர் பதவிக்கு முன் நிறுத்த வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதனால் காங்கிரஸ் கட்சி தேர்தலில் தோல்வியுறுவது நிட்சயம் எனவும் அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி 1983 ஆம் ஆண்டு சட்டப்படி இந்தியக் குடியுரிமை பெற்றிருக்கிறார் எனினும் இந்தியக் குடியுரிமை பெற்றவர் நாட்டின் தலைமைப் பொறுப்புக்களை ஏற்கலாமா என்பது இப்போதையபிரச்சினை அல்ல, வெளி நாட்டில் பிறந்த ஒருவர் அந்தப் பொறுப்பை வகிக்கலாமா என்பதே தற்போதைய உண்மையான பிரச்சினை என மத்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி தெரிவித்துள்ளார்.

சோனியா காந்தி தலைவராக நீடிக்க வேண்டும் என்ற காங்கிரஸ் காரர்களின் கோரிக்கையை சோனியா ஏற்றுள்ளார் இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான் என மார்க்சிய கம்யூனிஸ்ட்கட்சிபொதுச் செயலர் கர்கிஷன்சிங்சுர்ஜித் கூறியுள்ளார்.

சோனியா காந்தியின் முடிவை தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் ஜி.கே. மூப்பனார் வரவேற்றுள்ளார்.

சரியான நேரத்தில் செய்துள்ள சரியான முடிவு இது. இதனால் பல அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படும் என மூப்பனார் கூறினார். (இ—க)

# ஜெயலலிதா நீதிமன்றில் நேற்று ஆஜராகவில்லை

டான்சி ஊழல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஜெயலலிதா நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. தாம் சுகவீனமடைந்திருப்பதாகக் கூறி மருத்துவச் சான்றிதழ் அனுப்பி இருந்தார்.

இதனால் இந்த வழக்கில் ஜெயலலிதா மீதும் மற்றும் ஐவர் மீதும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை.

ஜெயலலிதா நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோய்க்குச் சிகிச்சை பெற்று வருவதுடன் அவருக்குக் காய்ச்சலும் இருப்பதால் ஒரு வார காலத்துக்குப் படுக்கையில் இருந்து ஓய்வு எடுக்க வேண்டும் என்று அப்பலோ மருத்துவமனையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவு இயக்குனர் கையெழுத்திட்ட மருத்துவச் சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதனை அடுத்தே நேற்று தாக்கல் செய்யப்படவேண்டிய வழக்கு மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த வழக்கை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு நீதிபதி ஒத்திவைத்தாலும் ஜெயலலிதா அப்போதும் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாத நிலை காணப்பட்டால் ஜூன் 2 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்குமாறு ஜெயலலிதாவின் வழக்கறிஞர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

இந்த வழக்கை மீண்டும் ஒத்திவைக்கப் போவதில்லை என்றும் இந்த வழக்கு விசாரணையைத் தாமதப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் முயல்வதாகவும் வழக்கு விசாரணைகளை ஒத்தி வைக்கக் கோரினால் அரசு மருத்துவமனை மருத்துவர் ஒருவரைக் கொண்டு ஜெயலலிதாவைப் பரிசோதனை செய்ய உத்தரவிட வேண்டி வரும் எனவும் இவ்வழக்கை விசாரணை செய்யும் நீதிபதி அன்பழகன் தெரிவித்தார். (இ–க)

### உலக அரங்கில்

## ... கைவிட்டனர்

இந்திய எண்ணெய்த்துறை ஊழியர்கள் தமது வேலை நிறுத்த முயற்சியைக் கைவிட்டனர்.

சம்பள உயர்வு கோரி இன்று முதல் வேலை நிறுத்தத்தில் குதிப்பது என இவர்கள் முடிவு செய்திருந்தனர்.

பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்குவதாக உறுதிமொழி அளித்ததை அடுத்தே வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

வேலை நிறுத்தப் போராட்டத்தில் 60 ஆயிரம் ஊழியர்கள் ஈடுபட இருந்தனர். (இ-க)

# 15 வயதுசாரணச் சிறுவன் துப்பாக்கிப் பிரயோகம்

மனமுடைந்துபோன 15 வயது சாரணர் சிறுவன் ஒருவன் அமெரிக்காவில் உள்ள ஜோர்ஜிய உயர் பாடசாலையில் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 6 மாணவர்கள் கடும் காயமடைந்தனர்.

அல்லாண்டாவில் இருந்து 25 மைல் தொலைவிலுள்ள ஜோர்ஜியாவின் கொன்யூஸ்ஸில் உள்ள ஹெரிடேஜ் உயர் பாடசாலையில் இந்த சம்பவம் நடைபெற்றது.

துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்து அட்லாண்டா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு சிறுமியின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. 5 சக மாணவர்களுக்கும் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

சிறுவனின் பாட்டனாருக்குச் சொந்தமான 22 கலிபர் மற்றும் 357 மக்னம் கைத்துப்பாக்கிகளை அச்சிறுவன் பயன் படுத்தினான் என்று தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிகளுடன் பாடசாலை பஸ்ஸில் பயணம் செய்த அச்சிறுவன் பாடசாலை அதிபரால் விரட்டப்பட்டுள்ளான். அதன் பின்னரே அச்சிறுவன் துப்பாக்கிப் பிரயோகம் செய்தான் என்று கூறப்படுகிறது வயது காரணமாக அச்சிறுவனின் பெயர் வெளியிடப்படவில்லை.

தனது நண்பியுடன் இருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டதால் விரக்தியும் வெறுப்பும் அடைந்த அச்சிறுவன் இச்செயலைப் புரிந்துள்ளான். குறிப்பிட்ட சிறுவன் ஏற்கனவே பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளான் என்று தெரியவருகின்றது.

ஏற்கனவே பாடசாலை மாணவன் ஒருவன் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பல மாணவர்கள் கொல்லப்பட்டது தெரிந்ததே. (இ–ரி)

# வாஜ்பாய் தலைமையை ஏற்றால் சரத்பவாரின் கட்சியுடன் கூட்டு

## மமதா பனர்ஜி அறிவிப்பு

புதுடில்லி, மே 26
காங்கிரஸ் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட சரத்பவார், பி.ஜே. சங்மா, தாரிக் அன்வர் ஆகியோர் வாஜ்பாயை பிரதமராக முன் நிறுத்த ஏற்றுக் கொண்டால் அவர்கள் தொடங்க இருக்கும் புதிய கட்சியுடன் தேர்தல் உடன்பாடு செய்துகொள்ள திருணமூல் காங்கிரஸ் தயார் என செல்வி மமதா பனர்ஜி அறிவித்துள்ளார்.

இதேவேளை வர இருக்கும் பொதுத்தேர்தல்கள் குறித்து மமதா பனர்ஜியுடன் பேச்சு நடத்த பிரதமர் வாஜ்பாய் திட்டமிட்டுள்ளதாக செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (இ-க)

# செய்திக் கொத்து

### அதிபர்களுக்கு சம்பளம்

நெடுந்தீவு, மே 26
முதலாம், இரண்டாம் மூன்றாம் தர அதிபர்களுக்கு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளம் தீவுப்பகுதியைச் சேர்ந்த அதிபர்களுக்கு இம்மாதம் வழங்கப்படவுள்ளது.

தீவகக் கல்வி வலயம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது (க-111)

### பரிசில் வழங்கல்

வேலணை, மே 26
நயினாதீவு கணேசா சனசமூக நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சமய அறிவுப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நிலைய கலையரங்கில் அண்மையில் நடைபெற்றது. (க-167)

### ஆலயம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மே 26
வண் வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணிவேலைகள் நடைபெறுகின்றது. எதிர்வரும் ஜூன் மாதம் 24 ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (க)

### நாணயக் குற்றித் தொலைபேசி

யாழ்ப்பாணம், மே 26
சண்டிலிப்பாய் சந்தியில் பொது மக்களின் பாவனைக்கென நாணயக் குற்றித் தொலைபேசி ஒன்று ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தால் பொருத்தப்பட்டுள்ளது. (க)

### நிர்வாக சபை

புன்னாலைக்கட்டுவன் மே 26
வலி தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தின் இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (க-133)

### விலை வீழ்ச்சி

அளவெட்டி, மே 26
செத்தல் மிளகாயின் விலை வீழ்ச்சி அடைந்து வருகின்றது.

குடாநாட்டின் பலபகுதிகளில் மிளகாயின் அறுவடைக் காலம் ஆரம்பமாகியுள்ளதை அடுத்து செத்தல் மிளகாயின் விலை வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக ஒரு கிலோ செத்தலின் விலை 450 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது தற்போது ஒரு கிலோ நூறு ரூபா வரை விற்கப்படுகின்றது [க-13]

### நூலக அபிவிருத்தி உத்தியோகத்தர்

புன்னாலைக்கட்டுவன், மே 26
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை நூலகங்களில் கடமையாற்றுவதற்கு என நூலக அபிவிருத்தி உத்தியோகத்தர் 27 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-133)

### வீதி திருத்தம்

நவாலி, மே 26
நீண்ட காலமாகத் திருத்தம் செய்யப்படாமலிருந்த வண்ணார் பண்ணை சிவப்பிரகாசம் வீதி தற்போது திருத்தப்பட்டு வருகின்றது. (க-100)

### விவரம் திரட்டுகிறது

வலி. மேற்கு. மே 26
சங்கானை பிரதேச செயலர் பிரிவில் பாடசாலைகளுக்குச் செல்லாதவர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

இப்பகுதி கிராம உத்தியோகத்தர்கள் பாடசாலை செல்லாதவர்களின் விவரங்களை உடனடியாக தமக்கு அறியத்தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-175

### சிவன் ஆலயம்

சுழிபுரம், மே. 26
பனிப்புலம் — காலையடி கதிர்வேலவர் ஆலயத்துக்கு வடக்குப் பக்கமாக உள்ள வீதியில் புதிதாக ஒரு சிவன் ஆலயம் கட்டப்பட்டு வருகின்றது இந்த ஆலய கும்பாபிஷேகம் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. (க-28)


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின்
1999 உயர்தர வகுப்பு மாணவன்

## இராஜகோபால் கங்கேசன்

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள் மாணவர்கள்.
கொக்குவில் இந்துக்கல்லூரி.

[சி/7662]



யாழ் / ஈச்சமோட்டை கலட்டிப் புலம்
அருள்மிகு

## ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான

புனருத்தாரண கும்பாபிஷேக

## முதலாம் ஆண்டு நிறைவு தின விழா

மேற்படி நிறைவு தினவிழா எதிர்வரும் 27-05-1999 வியாழக்கிழமை இடம்பெறும்.

காலை 8 00 மணிக்கு சங்காபிஷேகம் (1008 சங்குகள்) ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து நண்பகல் அன்னதான வைபவமும் மாலை 3 மணிக்கு விசேட ஆராதனைகளும், பஞ்சமூர்த்திகள் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட தண்டிகையில் முதல்முறையாக சிறிய வெளிவீதி வலம் வருவார்கள்.

அனைவரும் இந்நிகழ்வுகளில் பங்கு கொண்டு இறை அருள் பெற்றேகுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- பரிபாலன சபையினர்.

(66082)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## MATHS, ENGLISH

ஆண்டு 6 முதல் 9 வரை விசேடமாகவும் O/L Distinction, Credit பெறுபேறடையவும் கற்பிக்கப்படும். தினமும் காலை 6 தொடக்கம் 7 வரை 8—10 மாலை 3—6 வரை. ஆசிரியர்: 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்குவீதி, திருநெல்வேலி. (65881)

## நாளை வியாழமாற்றம்

27-05-99 வியாழமாற்றம் விற்பனையாகின்றது. கணிப்பாசிரியர் (Prof. க. சத்தியதாஸன்) சத்தியா. எனது புத்தகங்கள் கிடைக்குமிடம்; துர்க்கா ஸ்ரேஷனர்ஸ், சுன்னாகம். (66059)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

Stethoscope ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: கி. இரத்தினம், மூன்றாம் ஒழுங்கை, 82/16, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (66039)

## யாதவன் கல்வி மஞ்சரி

தரம் 9 ஆம், 10 ஆம், 11 ஆம் வகுப்புகளுக்குரிய சகல பாடங்களுக்குமான வினாக்களும் விடைகளும் வாரந் தோறும் வெளிவரும். யாழ். பிரபல புத்தகக் கடைகளில் விற்பனையாகிறது. (66061)

## தேவை

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். தொடர்பு: தனபாலசிங்கம், [நல்லூர் வீடியோ சென்ரர் வளவு] 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [66048]

## தவறிவிட்டது

பாலசிங்கம் லோகநாயகி ஞானவைரவர் கோயிலடி குப்பிளான் தெற்கு, ஏழாலை என்ற முகவரியுடைய தேசிய, விசேட அடையாள அட்டைகள் (528000461V, - 0906005953) யாழ். பஸ் நிலையத்தில் போஸ்டன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் விலாசத்திற்கு அனுப்பி அல்லது நேரில் ஒப்படைத்து உதவவும். (66069)

எனது லேடிஸ் Westar நியூ மொடல் கைக்கடிகாரம் நல்லூர் கந்தசாமி கோயிலுக்கும் பிறவுண் றோட் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பிறவுண் றோட் சந்தியில் இருக்கும் இல. மின்சார சபை காரியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். [66046]

## விற்பனைக்கு

பெரிய வேப்பமரம் உயரம் நேர் 18 அடி, சுற்று 7 அடி கொண்டது. உடன் விற்பனைக்கு. தொடர்பு; வே. அ. சிவகுரு வியாபாரி மூலை, வல்லிவளவு, பருத்தித்துறை. (66064)

## இறைச்சிக் கோழி

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் (அரைக்கோழிஉட்பட) தினமும் சுத்தம் செய்து காலை 7.00 தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அடை முட்டையும் வாழைக்குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (66047)

இறைச்சிக் கோழி புறொயிலர் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் கிடைக்கும். ஒவ்வொரு நாளும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு: லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (66065)

# மட்டக்களப்பில் நாளை பேரணி

இராணுவக்கட்டுப்பாடற்ற மட்டக்களப்புப் பகுதிகளில நடைபெற்று வந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதைக் கண்டித்து நாளை வியாழக்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இந்தப்பகுதிகளில் நோர்வே நாட்டு நிதியுதவியுடன் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன ஆனால் அண்மையில் அரசாங்கம் அவற்றைத் திடீரென இடைநிறுத்தியது. இதனால் இந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த விவசாய நடவடிக்கைகளில் 80 வீதமானவை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனை எதிர்த்தே ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறவுள்ளது. (ஐ-6)

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலாளர்
திரு. ஆ. மகாலிங்கம் அவர்களின் மாமியார்
திருமதி
## கே. மீனாட்சிப்பிள்ளை

அவர்களை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

பிரதேச செயலக அலுவலர்கள்,
கிராம அலுவலர்கள்,
சமுர்த்தி உத்தியோகத்தர்கள்,
வெளிக்கள உத்தியோகத்தர்கள்.

பிரதேச செயலகம்,
வலி. தெற்கு, உடுவில். (66079)

இலக்கிய கலாநிதி
# பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
அவர்களின்
# நூற்றாண்டு விழா
## முக்கிய அறிவித்தல்

இலக்கிய கலாநிதி
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்
பிறந்த தின நூற்றாண்டு விழா 27-06-99 ஞாயிறு ஆரம்பமாகிறது.

பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, கட்டுரைப் போட்டிகளும் மாணவர்கள் அல்லாதவர்களிடையே கவிதை (மரபுக் கவிதை)ப் போட்டியும் நடைபெறவுள்ளன.

கவிதைப் போட்டியில் பங்குபற்றுவோர் விண்ணப்பப் படிவத்தைக் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி 31 - 05 - 99 திங்கள் ஆகும்.**

**விசேட குறிப்பு:**

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைப் பழைய மாணவர்கள், பண்டிதமணி அவர்களிடம் பாடம் கேட்டவர்கள், ஆசியுரை, பிரார்த்தனை உரை, அணிந்துரை, கட்டுரை முதலானவற்றைப் பெற்றவர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், அபிமானிகள் உள்ளிட்ட அனைவருடனும் நாம் தொடர்பு கொள்வதற்கு வாய்ப்பாகத் தமது முகவரியை உடன் எமக்கு அனுப்பி வைக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அ. பஞ்சாட்சரம்
காரியதரிசி
பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (66073)

உ
மகாகணபதி துணை

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாம்
தனமையினால் கண்ணிற் பணிமின் கனிந்து!

இன்று 26 - 05 - 99 புதன்கிழமை கோலாகலமாக இடம்பெறும்

நல்லியடி குலனையார்பதி விநாயகர் ஆலய



# சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா



சிறப்புற வாழ்த்துகின்றோம்

**சிவசக்தி இரும்பகம் - ஜீவா பல்பொருள் வாணிபம்**
நெல்லியடி, கரவெட்டி.

**சாறாஸ் நாகரீக மாடம்**
நெல்லியடி, கரவெட்டி.

**லவ்லி கூல்பார் - சுபாஸ் பேக்கரி**
நெல்லியடி, கரவெட்டி.

**என். எஸ். ஆர். கடைச்சல் தொழிலகம்**
நெல்லியடி, கரவெட்டி.

**வேலவன் பல்பொருள் வாணிபம்**
நெல்லியடி, கரவெட்டி.

# நெல்லியடி சனசமூக நிலையம்
நெல்லியடி, கரவெட்டி.

(சி/7661)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
தமிழ்ச் சேர் நூலகம்

# 155 வெளிவாரி பட்டதாரிகள் பட்டச்சான்றிதழ் பெற்றனர்

## யாழ். பல்கலைக் கழகத்தில் வைபவம்

சுன்னாகம், மே 26
யாழ். பல்கலைக் கழகத்தின் மூன்றாவது கல்வி ஆண்டுக்கான வெளிவாரிப் பட்டதாரிகள் 155 பேருக்கு பட்டச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற எளிமையான வைபவமொன்றில் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை பட்டச் சான்றிதழ்களை வழங்கினார்.

வெளிவாரிப் பரீட்சைகள் அலகின் இணைப்பாளர் எம். நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பதில் கலைப் பீடாதிபதி பேராசிரியர் கோபால கிருஷ்ண ஐயர் பட்டச் சான்றிதழ் பெறுவோரின் பெயர்களை அறிவித்தார்.

பல்கலைக்கழகப் பதிவாளர் கலாநிதி க. குணராசாவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார். ஏனைய துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள் இந்தநிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

[ஐ·27]

## மருந்தகம், ஆய்வுகூடம் அமைக்கப்படுகின்றன

யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் மருந்தகம், ஆய்வுகூடம் மற்றும் மருத்துவ நிலையம் ஆகியவற்றை அமைக்கும் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வட இலங்கை சுதேச வைத்தியசபைத் தலைவரும், யாழ். பல்கலைக் கழகக் கலைப் பீடாதிபதியுமான பேராசிரியர் அ. சண்முகதாஸ் இத்தகவலைத் தெரிவித்தார்.

மேற்படி கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களுக்குத் தேவையான செயன்முறைக் கல்வி வசதிகளை வழங்கும் வகையிலேயே இவை ஏற்படுத்தப்பட்டு வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

## சுன்னாகம் பகுதியில் பொது இடங்களில் கள் விற்பனை

சுன்னாகம், மே 26
சுன்னாகம் பகுதியில் சட்டவிரோத கள் விற்பனை அதிகரித்துள்ளது. பல இடங்களிலும் மரங்களின் கீழே கள் விற்பனை இடம்பெறுகிறது.

சுன்னாகம் முத்துக்கிருஷ்ணர் வீதியில் மரங்களின் கீழ் கள் விற்பனை நடைபெறுவதையும் —

இளைஞர்கள் பலர் அங்கு கள் அருந்துவதையும் காண முடிகிறது.

இதேவேளை —

கோப்பாய் இராசபாதையில் மானிப்பாய் வீதி சந்திக்கும் இடத்துக்கு அண்மையிலும் மாலை வேளை இத்தகைய சட்டவிரோத கள் விற்பனை இடம்பெறுகிறது.

(ஐ 27)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 26
உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான விசேட சொற்பொழிவு ஒன்று இடம்பெறவுள்ளது.

மேற்படி கல்லூரி அதிபர் அ. ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ''கீதாமிர்தம்'' என்ற தலைப்பில் பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(இ-7)

## வயலுக்குச் சென்றவரை காணவில்லை

வவுனியா, மே 26
வவுனியாவில் கடந்த சனிக்கிழமை இரவு வயலில் காவல் செய்வதற்காகச் சென்ற ஒருவர் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா வீரபுரத்தைச் சேர்ந்த நல்லசேகரம்பிள்ளை திருச்செல்வம் (வயது 65) என்பவரே காணாமற்போனவராவார். இவர் ஈ. பி. ஆர் எல். எவ் அமைப்பு உறுப்பினர் ஒருவரின் தந்தை என்றும் தெரிவிக்கப்பட்டது

(ஐ·6-164)

## முதற்கலைத் தேர்வு பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 26
யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினரால் 96/97 ஆம்கல்வி ஆண்டு மாணவர்களுக்காக நடத்தப்பட்ட முதற்கலைத் தேர்வுப் பரீட்சை முடிவுகள் அடுத்த மாத நடுப்பகுதியில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

## பல்கலைக்கழகங்களில் சில பாடங்களுக்கான விசேட அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், மே 26
நாட்டின் சகல பல்கலைக் கழகங்களுக்கும் குறிப்பிட்ட சில பாடங்களுக்கு விசேட அனுமதி வழங்கும் திட்டத்தை நிறுத்துவதென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இத்தகவலை வெளியிட்டார்.

குறிப்பாக இந்து நாகரிகம், பௌத்த நாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம், இஸ்லாமிய நாகரிகம் ஆகிய பாடங்களுக்கே விசேட அனுமதி வழங்கும் திட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேற்குறித்த விசேட அனுமதி வழங்கும் திட்டத்தை நிறுத்தும் நடைமுறை 1997/98 ஆம் கல்வி ஆண்டு முதல் அமுல்படுத்தப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

1997 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி. சீ ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான புள்ளிகளைப் பெற்றிருந்தும் வெட்டுப் புள்ளி காரணமாக பல்கலைக் கழக அனுமதி கிடையாத தமக்கு விசேட அனுமதியின் கீழ் அனுமதி வரும் என எதிர்பார்த்திருந்த மாணவர்கள் பலர் மேற்படி அறிவிப்பு குறித்து ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இந்த முடிவு குறித்து அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் விரைவில் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

## வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், மே 26
நவிண்டில் குலனையம்பதி விநாயகர் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று புதன்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

(க)

மீண்டும் யாழ். நகரில்

**BEACON - (C C A. இல்)**

**கலைப்பிரிவு A/L 2000, 2001**

ஆரம்பம்: 29 - 05 - 1999 சனி
காலை 7-30 மணி (ப நே)

**ஆசிரியர் குழு**

அளவையியல் — திரு S S மனோகரன்
தமிழ் — பிரபல ஆசிரியர்
இந்துநாகரிகம் — திரு. ஜோதீஸ்வரன்
நாடகமும் அரங்கியலும் — திரு. நிஷாந்தன்

குறிப்பு: A/L 99 மாணவர்களுக்கு கடந்த 20 வருட அளவையியல் வினாவிடை வகுப்புகள் நடைபெறும். அச்சடித்த குறிப்புகளும் வழங்கப்படும்.

(66068) - நிர்வாகி

விற்பனையாகின்றது!

**ஆண்டு [தரம்] 6**
**சுற்றாடல் கல்விக்கான வழிகாட்டி**

புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கமைய
**மாதிரி மதிப்பீட்டுப் பயிற்சி**

◎ மாணவர்கள் தாமாகவே கற்பதற்கு உதவியாக குறிப்புகள் வினா விடைகள், விளக்கப்படங்கள் யாவும் உள்ளன.

ஆக்கம்: நா. மயில்வாகனம் B. A (Cey)
(Modern History)
(தேசிய கல்விச்சேவை மொழிபெயர்ப்பாளர், முன்னாள் ஆசிரியர் பரி.யோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.)

மொத்தமாக கொழும்பு விலைக்கே பெறுவதற்கு
ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
(66032)

# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வித் திணைக்களம் வடமராட்சி வலயம்

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான கேள்விகள், வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1999 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10 30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ. இல. | பாடசாலைப் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. | யா/ உடுப்பிட்டி பெண்கள்பாடசாலை 02 மாடிக் கட்டடமொன்றுக்கான கீழ் மாடி அமைக்கும் வேலை 130' x 25' முதலாவது கட்டம். | 500/- | 14,000/- |

01. மேற்படி வேலைகளுக்கு இக்ராட் (ஐசீரிஏடி) நிறுவனத்தின் தரம் எம் 08 ஆம் அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்கள்.

02. கேள்விப்பத்திரங்களில், பொருட்கள் சேவை வரி (ஜீ எஸ் ரி) சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை; பொருள்கள் சேவை வரி (ஜீ எஸ் ரி) சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

03. வேலைகளுக்கு அமைவாக மேற்சொல்லப்பட்ட கேள்விப் பணத்தை வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் வலயக் கல்விப்பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச்செய்து கேள்விப் பத்திரங்களை 27 - 05 - 1999 ஆம் திகதியிலிருந்து 03 - 06 - 1999 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களப் பாடசாலைக் கட்டட வேலைகள் கிளையில் பாடசாலைக் கட்டட பரிசோதகரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியும் இணைப் பிரதியும் தனித்தனி இரு கடித உறைகளில் இடப்பட்டுக் கடித உறைகளின் இடதுபுற மேற்பக்கத்தில் வேலையின் விவரமும் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு ''தலைவர் கேள்விச்சபை வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம், புலோலி'' என விலாசமிடப்பட்டு வடமராட்சி வலயக் கல்வித்திணைக்களத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரின் அலுவலக அறையினுள் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் 11 - 06 - 1999 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற் குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

05. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர், தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 04 மாத காலத்துக்குள் வேலைகளைப் பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும். எதுவித கால தாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலைக் கட்டட வேலைகள் பரிசோதகரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறியத் தருகின்றோம்.

சி. சிவராசா,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி வலயம்.

பாடசாலைக் கட்டட வேலைகள் கிளை.
வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம்,
புலோலி.

(சி/7651)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் இந்திய திருச்சபை யாழ். ஆதீனம்
# நம்பிக்கை இல்லம்
## (HOUSE OF HOPE)

எமது தாபனத்தில் உடல் ஊனமுற்ற, கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு வெற்றிடங்கள் உண்டு. 13 வயதுக்கு உட்பட்ட ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பின்வரும் ஒருவருடைய சிபார்சுக் கடிதத்துடன் நேரில் வரவும்.

1) கிராமசேவையாளர்
2) சபைக் குரு
3) பாடசாலை அதிபர்

நம்பிக்கை இல்லம்
இணுவில் மிஷன் வைத்தியசாலை,
இணுவில்.

– திட்டப் பணிப்பாளர்.

(65981)


## வழி காட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 26

யாழ். பல்கலைக் கழக வணிக மாணவர் மன்றம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வர்த்தகத்துறை மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நாளை வியாழக்கிழமையும் மறுநாள வெள்ளிக்கிழமையும் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை இந்தக் கருத்தரங்கு நடைபெறும்.

(ச)


## பணிப்பெண் தேவை

குடும்பப் பொறுப்புகளற்ற 45–50 வயதுக்கு இடைப்பட்ட, நம்பிக்கைக்குரிய, நற்குணமுள்ள பணிப்பெண் ஒருவர் தேவை. அநாதைகள் விரும்பத்தக்கது. சம்பளம், ஏனைய விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.

பொ. வேலுப்பிள்ளை,
41/4, செம்மணி வீதி,
நல்லூர்.

எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் சந்திக்கலாம்.

[66041]



## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்,

## வேலைகளுக்கான ஒப்பந்தகாரரைப் பதிவுசெய்தல்

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை, மானிப்பாய் நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கேள்வி நடைமுறைகள் மூலம் வேலைகள் செய்ய விரும்பும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் கோரப்படுகின்றன.

கீழ்க்குறிக்கப்பட்ட ஆவணங்களை அலுவலகத்தில் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக ரூபா 100ம் மீளளிக்கப்படக் கூடிய வைப்புப் பணமாக ரூபா 10,000ம் செலுத்துவதன் பேரில் இச் சபையின் வேலை ஒப்பந்தகாரராகத் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

1. ரூபா 5,00,000 - க்கான சொத்துக்களின் சான்றிதழ்.
2. வியாபாரப் பதிவுச் சான்றிதழ்.
3. ICTAD பதிவுச் சான்றிதழ்.
4. பொருள்கள், சேவைகள் வரிப்பதிவுச் சான்றிதழ்.
5. தொழில்நுட்பத் தகுதிச் சான்றிதழ். (வீதி அபிவிருத்தி அதிகாரசபை / வீதி அபிவிருத்தித் திணைக்களம் / மாநகர, நகர பிரதேச சபைகள் / கட்டடம் / நிர்மாணத் திணைக்களம்)
6. தொழில் நுட்பம், வாகனங்கள், உபகரணங்களின் ஆவணி முதலியவற்றின் சான்றிதழ்

இச் சபையுடன் பதிவு செய்துகொள்ளும் ஒப்பந்தகாரர்களைத் தவிர, வேறு எந்தத் தனிநபருக்கோ அல்லது தாபனங்களுக்கோ இனிவரும் காலங்களில் ஒப்பந்த வேலைகள் தொடர்பில் கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

பதிவுகள் யாவும் 1999–06–07 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

வெ. அ. ஜோன்சன் ஜே. பி. யூ எம்.
தலைவர்
வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை.

வலிகாமம் தென் மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

[C/7657]



## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 – 06 – 1934 | 26 – 05 – 1994 |

திருமதி
### திரவியம் திருநாவுக்கரசு

எங்கள் அம்மா நீங்கள் மறைந்து
ஆண்டு ஐந்து வந்ததுவோ?
அன்புடன் வாழ வைத்த தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
முருகப் பெருமானை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

[66042]



## மகாதேவா ஜோதிடம்

27 - 05 - 1999 இல்
வியாழமாற்றம்
புத்தகம் வெளிவந்து
எங்கும்
விற்பனையாகின்றது.

(சி/0001)



## ஈசன் கல்வி நிலையம்
கே.கே.எஸ் வீதி,
கோண்டாவில்.

### கணக்கீடு AL/2000

❀ ஒற்றைப் பதிவு
திரு. பாலவாசன்
ஆரம்பம்: 29-05-99
[சனி]
3 – 30 P.M

குறிப்பு: தனிப்பாட அனுமதிகளும் வழங்கப்படும்.

[66031]



# சபிண்டீகரண அந்தியேட்டி அழைப்பும்
# நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| 31 ஆம் நாள் | 33 ஆம் நாள் |
|---|---|



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13 – 11 – 1944 | 26 – 04 – 1999 |



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 28 – 05 – 1948 | 24 – 04 – 1999 |

அமரர்
### கந்தப்பு பாலகிருஷ்ணன்
சட்டத்தரணி
முருகேசு அன்ட் நீலகண்டன் கொம்பனி, கொழும்பு.

அமரர்
### சிதம்பரப்பிள்ளை லோகநாதன்
நீர்ப்பாசன பொறியியலாளர்,
பெரியமடு.

மாசறு போம் ஆண்டும் போம் மாண்பாட்சி தானும்போம் நேசமுறு பாசநெஞ்சங்கள்
பாலுவொடு லோகர்தானும் எத்தேசம் போனார்களென்று ஏங்காது எவ்வுயிர்க்கும்
தஞ்சமாம் ஈசன் திருப்பாதங்களை இணைந்தார்கள் என்னு தேறித்தேறி ஆறுவமே!

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எம் அன்புத் தெய்வங்களின் 31 ஆம் நாள் 33 ஆம் நாள் நினைவஞ்சலிகளிலும் 26—05—1999 இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இறைவனடி ஏகிய எம் இனிய குடும்பத் தலைவர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டும் அனுதாபம் தெரிவித்தும் மலர் வளையங்கள் சார்த்தியும் பலவகைகளிலும் உதவிகள் புரிந்த அயலவர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் எமது இதயங் கனிந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
– குடும்பத்தினர்

நாவலர்இல்லம்,
காவெட்டி மேற்கு.

(இ/ 7647)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் [illegible] நூலகம்
உதயன்

# உதயன்

## நம்பமுடியுமா?

அரசாங்கத்தின் பதவிக் காலம் முடிவதற்குள் போரை முடிவுக்குக் கொண்டு வந்து அரசின் தீர்வுத்திட்டத்தை நிறைவேற்றுவோம் — என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார். எல்பிட்டியாவில் நடைபெற்ற தேர்தல் கூட்டப் பேச்சு இது.

அடுத்த மாதம் பத்தாம் திகதி நடைபெறவுள்ள தென்மாகாண சபைத்தேர்தலில் ஆளுங்கட்சி வென்றால், ஜனாதிபதித் தேர்தலை அல்லது பொதுத் தேர்தலை அரசு நடத்தும் என்ற அரசியல் ஊகம் வலுத்து வருகிறது

இதன் மத்தியில் அரசின் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அரசியல் தீர்வு கொண்டுவரப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அரசியல் தீர்வு தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் அதனை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றுவதே இனிச் செய்ய வேண்டிய பணி என்றவாறும் ஜனாதிபதி பேசியுள்ளார்.

அரசின் தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சட்டமூலமாகக் கொண்டு வந்து நிறைவேற்றக் கூடிய வாக்குப்பலம் இல்லாததாலேயே — பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக்கட்சி ஒத்துழைப்பு வழங்க மறுப்பதாலேயே — அது தடைப்பட்டிருப்பதாகக் கூறிவருபவரும் ஜனாதிபதியே!

''அரசமைப்புப் புரட்சி'' ஒன்றின் மூலம், மக்கள் மத்தியில் கருத்துக் கணிப்பு நடத்தி தீர்வுத் திட்டத்தை நிறைவேற்ற உள்ளதாக சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி கூறியிருந்தார். ஆனால் இதுவரை அப்படி எதுவும் நடைபெறவில்ல மறக்கப்பட்ட விடயமாக அது மாறிவிட்ட வேளையில், சட்ட மூலத்தைக் கொண்டுவர அரசு முனைந்து வருவதாக ஆளுங்கட்சி தரப்பில் இப்போது பேசப்படுகிறது

அநேகமாக எதிர்வரும் ஓகஸ்டில் அதிகாரப் பரவல் பொதி நாடாளுமன்றத்தில் சட்டமூலமாகச் சமர்ப்பிக்கப்படும் என்று பேச்சடிபடுகிறது

இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பதாகக் கூறியே ஜனாதிபதி பதவியைப் பிடித்துக் கொண்டார் சந்திரிகா ஆனால் அதனை இதுவரை செய்யவில்லை ஐக்கிய தேசியக் கட்சியையும் விடுதலைப் புலிகளையும் மாறிமாறிக் குற்றஞ்சாட்டி நாலரை வருடங்களைக் கழித்துவிட்டார்; கடத்திவிட்டார்.

அது மட்டுமெனினும் பரவாயில்லை. போரினூடு சமாதானம் என்ற ஒவ்வாத கொள்கையைக் கடைப்பிடித்து நாட்டைக் குட்டிச் சுவராக்கிக்கொண்டிருக்கிறார்.

பொதுத்தேர்தலை அல்லது ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதனைக் கருதியே. தமிழர்களின் வாக்குகளை மனதில் வைத்தே பதவிக்காலம் முடிவதற்கு முன்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற மந்திரம் ஓதத் தொடங்கப்பட்டுள்ளது. மக்கள் இதனை இலகுவில் நம்ப மாட்டார்கள்!.

# ஆசிரியருக்கான காப்புறுதி திட்டம்: யாழ்.கல்வி வலயத்தில் அமுல்செய்க

## தமிழர் ஆசிரியர் சங்க தூதுக்குழு கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 26

1997 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கான காப்புறுதித் திட்டம இதுவரை யாழ். வலயத்தில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த உடனடியாக ஆவன செய்ய வேண்டும்.

மேற்கண்டவாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழு யாழ் கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம் பிள்ளையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி தூதுக்குழு பணிப்பாளருடன் கலந்துரையாடிய விடயங்களில் சில வருமாறு

★ யாழ் வலயத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கை பாடசாலைகளுக்கிடையில் சமநிலையற்ற தன்மையில் இருக்கின்றது. பல பாடசாலைகளில் ஆசிரியர் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது கிராமப்புறப் பாடசாலைகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு; எனவே இடமாற்றத் திட்டம் ஒன்றை வகுத்து இந்த நிலையைச் சீர்செய்யவேண்டும் தற்போது வகுக்கப்பட்டுள்ள இடமாற்றத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

★ ஓய்வுபெற்ற அதிபர்கள் ஆசிரியர்கள் உட்படப் பெரும் எண்ணிக்கையான அதிபர்களும், ஆசிரியர்களும் இதுவரை ஓய்வூதிய இலக்கத்தைப் பெறாமல் இருக்கின்றனர் அவர்களுக்கு இந்த இலக்கம் விரைவில் கிடைக்க ஆவனசெய்யப்படவேண்டும். ஆசிரிய இலக்கமும் பலருக்கு இதுவரை கிடைக்கவில்லை ஆகவே இவற்றைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

★ தொலைக்கல்விப் பயிற்சியை முடித்த பல ஆசிரியர்கள் இதுவரை ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப் படாமலிருக்கின்றனர். இவர்களை ஆசிரியர்சேவைகள் உள்வாங்கிஇவர்களுக்குரிய சம்பளத்தையும், பாக்கிச்சம்பளத்தையும் வழங்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ ஆசிரிய சேவைத தரம் 3—I 2—I, 3—II, 2—II, இல் இருப்பவர்கள் அடுத்த தரத்திற்கு உள்வாங்கப்படாமல் நீண்டகாலமாக அதே தரத்தில் இருக்கின்றனர்: இவர்கள் அடுத்த தரத்திற்கு உள்வாங்கப்பட வேண்டும். உச்சச் சம்பளம் பெறுபவர்களுக்கு இரண்டு வருடத்தால் வழங்கப்படும் சம்பள உயர்ச்சியும் வழங்கப்பட வேண்டும்.

★ சேவையில் இருக்கும் போது பட்டம் பெற்ற ஆசிரியர்கள் பட்டதாரி நியமனத்திற்குள் உள்வாங்கப்படாமல், அதற்குரிய சம்பளத்தையும் பெறாமல் இருக்கின்றார்கள். இந்தக் குறைபாட்டை நீக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும.

★ பல்வேறு ஆண்டுகளில் நியமனம பெற்ற ஆசிரியர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனக் கடிதம் கிடைக்கவில்லை. இதனால் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர். இதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்

★ விடுமுறை நாள்களிலும், சனி, ஞாயிறு. தினங்களிலும் திடீர் திடீரெனக்கருத்தரங்குகளும்கலந்துரையாடல்களும் வைக்கப்படுவதாக அதிபர்களும், ஆசிரியர்களும் சங்கத்துக்கு முறைப்பாடு செய்துள்ளனர். புதிய கல்விச் சீர்திருத்தத்தினால் ஆசிரியர்கள் பாடசாலைகளில் வேலைப் பளுக்களில் இருக்கின்றனர். எனவே இத்தகைய நிலையைத் தவிர்த்து முன்னறிவித்தலுடன் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், செயலமர்வுகள் போன்றவைகளை நடத்த நடவடிக்கை எடுக்கவும்.

★ இராணுவ நடவடிக்கையினால் பல்வேறு மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்து மீண்டும் யாழ். வலயத்துக்குள் திரும்பி வந்த ஆசிரியர்களில் பலருக்கு இதுவரை 1996 ஆம், 97 ஆம் ஆண்டுகளுக்குரிய இடர்க்காலக் கொடுப்பனவு கிடைக்கவில்லை. இக்கொடுப்பனவு கிடைக்க நடவடிக்கை எடுக்கவும்.

★ புதிய கல்விச் சீர்திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலை மறுசீரமைப்பு, பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. சுயமாகச் செயற்பட்டு பாடசாலைகளின் தரத்தை உயர்த்த பல்வேறு கோணங்களில் கலந்துரையாடல்கள், சந்திப்புக்கள் என்பன நடைபெற்று வருகின்றன. இதன் உண்மை நிலையை சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துரைத்து அயல் பாடசாலைகளைப் பாதிக்காத வண்ணம் நடவடிக்கை எடுக்கவும்.

★ 1995 ஆம் ஆண்டுக்குரிய அதிபர்களின் சம்பள நிலுவையில் முதல் மூன்றுமாத நிலுவையை உடன் வழங்கும்படி உத்தரவு கிடைத்தும் இதுவரை நடவடிக்கை எடுக்காததை மிகவும் கவலையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இதேபோல் 01-01-95 இலும், 01-01-97 இலும் கிடைக்கவேண்டிய அதிபர் தரத்தில் உள்ளவர்களுக்குரிய புதிய சம்பளம் இந்த மாதம் கிடைக்கவில்லை. மற்றையவலயங்கள் இவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து இந்த மாதம் செய்து முடித்துள்ளன என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

★ 1997 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கான காப்புறுதி திட்டம் இதுவரை இந்த வலயத்தில் நடைமுறைப்படுத்தப் படவில்லை. இதை நடைமுறைப்படுத்தி ஆசிரியர்களின் நலனைக் கவனிக்க ஆவன செய்யவும்.

ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர்களுக்கு ஓய்வூதியம் கிடைப்பதில் தாமதம ஏற்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவர்கள் இளைப்பாறுவதற்கு ஐந்து மாதங்களுக்கு முன் பாடசாலைகளுக்குரிய பொருள்களின் விவரத்தைச் சரிசெய்து அவர்களின் ஓய்வூதியம் விரைவில் கிடைக்க நடவடிக்கை எடுக்கவும் .

★ அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் 10 மாத சம்பள முற்பணம் கிடைக்க கட்டு நிதியை வடக்கு கிழக்கு மாகாணசபையிடம் கோருவதோடு, கிடைக்கும் நிதியில் விண்ணப்பித்தவர்களுக்கு இம் முற்பணம் கிடைக்க ஆவன செய்யவும்.

★ இந்த வருடம் ஆரம்பத்தில் தீவுப்பகுதி கல்விப் பணிப்பாளருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு அமைய தீவுப்பகுதியில் நீண்டகாலமாக மிகவும் கஷ்டத்தின் மத்தியில் கடமை புரியும் ஆசிரியர்களை அவர்களின் சொந்த இடத்துக்கு இடமாற்றம் பெறவும் இங்கிருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையான ஆசிரியர்களை நிர்ணயிக்கப்பட்ட சில வருடங்களுக்கு தீவுப்பகுதிக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்த இடமாற்றத்துக்கு மாகாணக்கல்விப்பணிப்பாளரும், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாள சம்மதம் தெரிவித்துள்ளனர் என்பதையும் தெரியப்படுத்துகின்றேன். [இ-37]

# புனித பிலிப் நேரியாரின் வருடாந்த மகோற்சவம்

## கத்தோலிக்க உலகு இன்று கொண்டாடுகிறது

புனித பிலிப் நேரியாரின் வருடாந்த மகோற்சவத்தை இன்று கத்தோலிக்க உலகம் கொண்டாடுகின்றது.

இப்புனிதர் இளம்பராயத்திலிருந்தே புரட்சிகரமான துறவற வாழ்வை ஆரம்பித்தார்.

துறவற வாழ்வில், தம் முழு நேரத்தையும் செபத்தியானத்திலும், தேவ தொண்டு புரிவதிலும், நோயாளிகள், கஷ்டப்படுவோர், மரணப்படுக்கையாய் இருப்பவர்களுக்கு தொண்டு புரிவதிலும் இவர் செலவிட்டார்.

ஏழு கோயில்களை அடிக்கடி தரிசித்து செபத்தியானங்களை நடத்திவந்தார். ''தியானப் பிரசங்கியர் சபை'' என்னும் மாபெரும் பிரசங்கியார் சபையை உருவாக்கினார். இவரின் பூசைப்பலி சொல்லிமுடிய இரண்டு மணித்தியாலங்கள் எடுக்கும். பூசை நேரத்தில் சில வேளைகளில் பரவச அருள்பெறுவார்.

இவரின் தேவ நேச அக்கினி ஆனது, அபூர்வமாக இவரின் விலா எலும்பைப் பாதிக்கச் செய்தும் எந்த விதமான சிகிச்சையுமின்றி 50 வருடங்கள் வாழ்ந்தார்.

ஏழைகள், அநாதைகள், நோயாளிகள் முதலானோர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக 'பரிசுத்த பரம திரித்துவத்தின்'' நாமங் கொண்ட ஆஸ்பத்திரியை உருவாக்கினார்.

இப்புனிதர் அடிக்கடி உபவாசமாய்இருப்பார் சாதாரணமாக நாள் ஒன்றுக்கு ஒரு முறை மாத்திரம உணவு உட்கொள்வார்.

### சி. பி. சேனராஜா

இவர் உண்பது மாமிசம், மச்சம் இல்லாத கோதுமை அப்பம், கீரை வகைகள், பழவகைகள் என்பனவாகும்.

இவர் 80 வயதில் பரமபதம் அடைந்தார். மரித்த பின் இவரின் பூதவுடல் அழியாமல இற்றை வரைக்கும் உரோமாபுரியில் உள்ள 'கிபேசா நோவா'' ஆலயத்தில வைக்கப்பட்டிருக்கின்றது.

இப்புனிதரின் பிரசங்கியார் சபைக் குருக்களான முத்திப் பேறுபெற்ற பட்டம் பெற்ற ஆசாயோசேவாஸ் முனிவர், யாக்கோமே கொன்சால்வெஸ் என்றும் சாங்கோ பாங்க சுவாமிகள், முக்கியமானவர்கள்.

இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன் இலங்கையில் கத்தோலிக்கரின் எதிரிகளான ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் ஆட்சியாளர்களின் துன்புறுத்துதல் மத்தியில் மேற்படி குருமார்கள் தலைசிறந்த அப்போஸ்தலிக்க தொண்டு புரிந்து. 40-க்கு மேற்பட்ட தேவாலயங்களை உண்டாக்கியும், 40-க்கு மேற்பட்ட கத்தோலிக்க வழிபாட்டு நூல்களை எழுதியும், இலங்கை பூராவும் கத்தோலிக்க மதத்தைப் பரப்பினார்கள். ★

### நாளை

வைகாசி 13
வியாழக்கிழமை
திதி: துவாதசி
முற்பகல் 6 59 வரை
நட்சத்திரம்: சித்திரை
முற்பகல் 9.19வரை.
பிரதோஷ விரதம்
சுபநேரம்: 7.22 - 8 52
ராகுகாலம்: 1 22 - 2 52
[பகலுக்கும் இரவுக்கும்
பழைய நேரப்படி]

### உதயவாக்கு

தன்னுள் மறைந்து கிடப்பதை வெளிப்படுத்துவதனால் தன்னையே மேலும் சிறப்புடையவனாக்கிக் கொள்கின்றான்.
— தாகூர்

## இலக்கிய நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 26

யாழ் இலக்கியவட்டம ஒழுங்கு செய்துள்ள இலக்கிய நிகழ்வு ஒன்று இம்மாதம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இலக்கிய வட்டத்தின் துணைத்தலைவர் க. சொக்கலிங்கம்[சொக்கன்] தலைமையில் நடைபெறும்.

''ஈழத்துச் சிறுகதை முன்னோடிகள்'' என்ற தலைப்பில் க.குணராஜா [செங்கை ஆழியான்] உரை நிகழ்த்துவார். இலக்கியப் பாத்திரங்கள் பத்து என்ற விசேட நிகழ்வும் இடம்பெறும்.

வளர்ந்து வரும் வல்லமை மிக்க இளங் கலைஞர்கள் என்ற தலைப்பில் கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அறிமுகவுரை நிகழ்த்துவார்.

தொடர்ந்துகலந்துரையாடலும் நடைபெறும்.

(இ-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானத்தில் பயணம் செய்ய அனுமதி பெற்றோர் விவரம்

**கரவெட்டி**

1எஸ். பிரபாகரன் (524/00996/ஏ), ஆர். லலிதா (524/101082/ஏ), எம். மகாதேவா (524/100995/ஏ), பி. சின்னத்தம்பி (524/100919/ஏ), சே. அன்னலக்ஷ்மி (524/100891/பி), வி. கதிர்காம நந்தனன் (524/100891/ஏ), கே. திருவேணி (524/100891/சி), எஸ்.ஜோகம்மா (524/101129/பி, கே. கிருஷ்ணரூபன் (524/095152/ஏ), டாக்டர் ஏ. விஸ்வலிங்கம் (524/100847/ஏ).

எஸ். உதயணன் (524/101129/ஏ), பி. சாருஜன் (524/101160/டி). எஸ். கு...ராணி 524/101160/சி). ஜே. சுதாகரன் (524/101145/ஏ), கே. சுப்பிரமணியம் (524/101203/ஏ), எஸ். சின்னத்துரை (524/101032/ஏ). எஸ். நல்லதம்பி (524/201097/ஏ), எம். தங்கமுத்து (524/091878/பி), ஏ. நிதிலவாணன் (524/101147/ஏ). ரி. சுந்தரம் (524/101072/ஏ)

ரி. ரஜிதா (524/101072/பி), ரி. மகாநந்தம் (524/101072/சி), ரி. கேதீஸ் (524/101072/டி), என். லட்சுமி (524/098082/ஏ), எஸ். பூபதி, (524/101160/ஏ), எஸ். செல்வராணி (524/101160/பி), எஸ். பி ஜே. டி. சில்வா (524/102833/ஏ), எஸ். கஜேந்திரன் (524/100873/பி), கே. கந்தையா [524/10763/பி), பி. அஜந்தா 524/101233/டி).

பி. ராஜகுமாரி [524/102747/ஏ], எம் பிரேமானந்த் [524/098322/பி], எம். சோபோநந்த் [524/098322/டி], எம். விமல்நாத் [524/098322/ஈ], எம். பவிதா [524/098322/எவ்]. வி. சிவராஜா (524/098244/ஏ], ஐ. உதயரட்ணம் [524/093645/ஏ], ஐ. உதயமாலா[524/093645/பி], ஆர். நடராஜா [524/100779/ஏ] பி.காயத்திரி [524/101233 இ],

கே. நந்தினி [524/084507/பி], ஆர். ஜெயந்தி [524/101233/பி], ஏ. சிவசுவாமி [524/100971/ஏ]. ஜே. ரவி சங்கர் அம்மா [524/100817/ஏ], கே. சரஸ்வதி [524/084507/ஏ], பி. துரைராஜா [524/097919/ஏ], ஜி. வாசுதேவன் [524/095255/ஏ], பி. முத்தையா [524/100838/ஏ], ஆர். தேவசுந்தரம் [524/098321/ஏ]. ரி. தயாழினி [524/098321/பி].

ரி. ஆர் பிரியதர்சினி /524/098321/சி/], ரி. தட்சாயினி (524/098321/டி]. எஸ். வன்னியசிங்கம் [513/095671/ஏ]. எம். பாஸ்கரன் 524/098375/ஏ], என். நீலாம்பை (524/098313/ டி), ரி. பத்மாவதி (524/098209/ஏ]. வி. விஜியலஷ்மி [524/095462/ஏ], ஏ அருளம்பலம் (524/095313/ஏ), ஏ பரமேஸ்வரி (524/095313/பி), ஏ. சந்திரிகா (524/953130/சி).

எஸ். லோகநாதன் (524/101188/ ஏ ), எம். உமாதேவி (525/098058/ஏ), கே. மனோன்மணி (524/098129/ஏ),எஸ். சண்முகதாஸ்(524/098346/ஏ), என் ஜெயந்த் (524/098313/ஏ). பி . ஜெகன் (524/101233/ஈ ), என்.எழில்வேந்தன் (524/098313/சி). எஸ். ரட்ணராஜா (524/101143/ஏ), ஆர். ரகு (524/098322/ஏ), கேமசிலாமணி (524/1008322/ஏ )

எஸ். சிவபாக்கியம் (524/100873/ஏ). எஸ். வேலாயுதம் (524/102642/ஏ). கே. கதிர்காமு (524/100845/ஏ), ஏ.மெய்யழகன் (524/085388/ஏ), ஏ ஆரணா (524/085388/பி), எஸ். கந்தசாமி (524/101254/ஏ), எஸ் பழனிப்பிள்ளை (524/102741/ஏ), பி. சரோஜி தேவி (524/101233/ஏ), என், எழிலரசி (524/098313/பி).

பி. தங்கராஜா (524/098055/ஏ),ரி பத்மினி 524/087960/ஏ), பி. றஜினி (524/098138/சி), வி வேலுப்பிள்ளை (524/091965/ஏ ). கே. நாகேந்திரன் (524/091981/ஏ), என். பாஸ்கரன் (524/098138/ஏ). ஆர். சுரேரஞ்சன் ( 524/098119/பி ), பி மகாதேவன் (524/098108/ஏ), கே. பொன்னம்மா (524/098086/சி), பி. கந்தையாப்பிள்ளை (524/098086/பி),

கே. கிருஷ்ணதாசன் (524/098086/ஏ). என். கைலாய. (524/092079/ஏ), கே. நிர்தியகலா (524/098085/(ஏத் கே. கமலவதனி(524/0921231/பி), ரி. விமலராணி(524/092112/ஏ). ஆர். குமாரவேலு (524/ 091231/ஏ), ரி. சஞ்ஜீபன் (524/ 098010/சி), எஸ். வல்லிபுரம்( 524/092134/ஏ), வி. சின்னம்மா (524/092134/பி). ஏ. ரட்ணகோபால் (524/ 092135/ஏ),

ஆர். கமலதீபன் (524/092135/பி), ஆர். பிரதீபா(524/092135/சி), பி. ஞானரட்ணம் (524/092137/ஏ). எச். தங்கராணி (524/092137பி). ஜி. ராஜ்குமார் (524/092137/கி), ஜி. உதயகுமார் 524/092137/டி). கே. சுப்பிரமணியம் (524/09...). ரி. பார்ஷா (524/097988/ கே. ராசமணி (524/098068

ஏ). ஐ. தவேந்திரன் (524/089940/டி).

எஸ். நகுலேஸ்வரி (524 093629/பி); ரி. பிரதீபன் (524/087960/பி); பி எம். ஜோசெப் ( OCCCA/AIR/ 0058/ஏ); எஸ். சிவலோகன் (524/098719/டி); எஸ். சிவராஜா (524/098378/ஏ); பி. வேணுகோபால் (524/088030/ஏ); சாதுன்திலகம் (524/088030/பி); கோபிகா (524/088030/சி); எஸ். ராகுலன் (524/088031/சி); பி.விஜயகுமாரன் (524/089886/ஏ);.

எஸ் செல்வராஜா [524/101012/ஏ[. ரி. கந்தப்பு [524/198100/ஏ]. ஈ அருள் பிரிந்தா [524/101016/ஏ],

பி. அருந்தவநாயகி ]524/073479/ஏ]. கே நாகம்மா [524/100849/ஏ]. கே. கல்பனா [524/100809/பி], எஸ். மகாலிங்கம் [524/100809ஏ]. ரி. சதாசிவம் [524/100808/ஏ]. கே. பாக்கியம் [524/100865/பி]. கே. சந்தவனம் [524/100865/ஏ]

வி. வீரசத்தி [524/100939/ஏ[. எஸ். வல்லிபுரம் 524/086670/ஏ), என். கிருஷ்ணபிள்ளை [524/086838/டி], ஜே. துசிகா [524/086838/சி], ஜே. அஸ்வினி [524/086838/பி]. ஜே. யோகலிங்கம் [524/086838/ஏ]. எஸ். சத்தியரேகா [524/086817/பி], எஸ் சிவப்பிரகாசம் [ 544/086817/ஏ ], எஸ். ஜெயசிங்கம் [524 098235/ஏ]. வி. ராஜேஸ்வரி [524/086670/பி],

வி. வேலாயுதம் [524/086587/ஏ], எஸ். பிரினிதன் ]524/027620/பி], எம். பபிதா [ 524/098322/சி ], ஏ. செந்திவேலாயுதம் [524/027620/ஏ].

★

## ஆரம்பப் பிரிவு உபகரணங்கள் அன்பளிப்பு

கொழும்புத்துறை, மே26

வலிகாமம் வலயம் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கான ஆரம்பப்பிரிவு உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உபகரண அமைப்பில் கணித, விஞ்ஞான, தமிழ், ஆங்கில பாடங்களுக்கான உபகரணத் தொகுதிகளுடன் மற்றும் சங்கீத இசைக் கருவிகளும் வழங்கப்பட்டன.

தற்போதைய புதிய கல்விச் சீர்திருத்தப் பாடத்திட்டத்துக்கு இந்த உபகரணத் தொகுதி பெரிதும் பயன்படும்.

இந்த கற்பித்தல் உபகரணங்கள் திருகோணமலை வடக்கு— கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டன.

(ஐ-30)

## இசை நாடா வெளியீடு

யாழ் மறைமாவட்ட இரண்டாயிரம் ஆண்டு யூபிலி ஆணைக்குழுவின் புதுயுகப் பூக்கள் ஒலிப்பதிவு இசை நாடா வெளியீட்டுவிழா இன்று புதன்கிழமை யாழ். திருமறைக் கலாமன்றத்தில் பிற்பகல் 5 15 மணிககு இடம் பெறவுள்ளது.

(க)

## போதைவஸ்து குற்றச்சாட்டு

# 2 சிப்பாய்கள் மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்

நெல்லியடி, மே 26

போதைவஸ்து வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இரு படையினர் நேற்று முன்தினம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டனர்.

வடமராட்சிப்பகுதியில் கடமை ஆற்றிய சமயம் கடந்த மார்ச் மாதம் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை மாவட்ட நீ மன்றத்தில் மாவட்ட நீதிவான் இ த விக்னராஜா முன்னிலையில் இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம் இராணுவ பொலீஸ் சார்ஜண்ட பண்டாரகுடகே தயாவன்ச (வயது 38) சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:

குறித்த பிரிகேட் பிரிவில் நான் 4மாத காலமாகப் பணி புரிந்து வருகின்றேன். இங்கு ஒழுங்கு கட்டுப்பாடுகளை கவனிப்பதே எனது கடமை ஆகும்.

அண்மையில் எனக்குக் கிடைத்த தகவலின்படி வடமராட்சிப் பிரிகேட் பிரிவில் சில படையினர் போதைவஸ்து வைத்திருப்பது தெரிய வந்தது.

இதனை உன்னிப்பாகக் கவனித்த நான் 24 - 03 - 1999 இல் கிடைத்த தகவல் ஒன்றுக்கு இணங்க ஏக்கநாயக்கா என்னும் இராணுவவீரரின் பெட்டியில் போதைவஸ்துவை கண்டு பிடித்தேன் அதனை அவரிடமிருந்து கைப்பற்றிவிட்டு, மேலும் விசாரணை செய்த சமயம் கராந்தக்க பத்திரானகே, என்பவரிடமிருந்தும் சிறு குளிகைகளாக உருட்டிய நிலையில் 10 குளிகைகள் போதைவஸ்துவைக் கண்டு பிடித்தேன்.

இவர்கள் இருவரையும் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்திருந்தேன் — என்றார்.

போதைவஸ்து குளிகைகள் சந்தேக நபர்கள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்ட நிலையில் நீதிவான் முன் காண்பிக்கப்பட்டது.

குறித்த பொருளை கொழும்பு இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்ட பருத்தித்துறை மாவட்ட நீதிவான் இ. த. விக்னராஜா, சந்தேக நபர்களை அடுத்த மாதம் 7 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(இ-109)


## அபர்ணா அக்கடமி

(சசிமில் அருகில்)
சண்டிலிப்பாய்

**A/L 2000, 2001**

**கலைப் பிரிவு**

தமிழ், இந்துநாகரீகம் — திரு. காரை. S. கெங்கா
பொருளியல் — திரு. ஜெயக்குமார்

**பிரத்தியேக வகுப்புகள்**

**G. A. Q.** (யாழ். வளாகம்)

தமிழ், இந்துநாகரிகம் — காரை. S கெங்கா


குறிப்பு: வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. தமிழ், இந்துநாகரிக வகுப்புகள் வாரத்தில் 3 மணித்தியாலம் நடைபெறும்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
05 - 06 - 99 சனி
மாலை 3-00 மணி.

- நிர்வாகி

(66070)


## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**இராஜசிங்கம் இராஜமனோகரன்**

[பிறப்பு, இறப்பு] விவாகப் பதிவாளர்]

பிறப்பு 07—07—1934 இறப்பு 25—05—1991

திதி: 26—05—1999

உங்கள் ஆத்மா சாந்தியடைய காசிவிநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிகள்.

'இராஜகிரி'
தெல்லிப்பழை.

[சி/7680]

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்
திரு. ரவீந்திரனின் அன்புத் தந்தையார்

**சி. சுப்பிரமணியம்**

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கலைவாணி விளையாட்டுக் கழகம்**

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(66077)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசனிலிருந்து 10பேர் அ'புர நீதிமன்றத்துக்கு!

யாழ்ப்பாணம், மே 26

காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 10 பேர் கடந்த 17 ஆம் திகதி அனுராதபுரம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சுப்பிரமணியம் மார்க்கண்டு, ராசன் இராஜேந்திரன், கண்ணதாஸ் நாகேந்திரராணி, குணரட்ணம் பிறேமகுமார், திருச்செல்வம் யோசேப், ஐயாத்துரை சேகர் சின்னத்தம்பி யோகராசா, சின்னத்தம்பி பவளராணி, எஸ். அருள்நேசன், எஸ். சுரேந்திரன் ஆகியோரே காங்கேசன்துறையில் இருந்து அனுராதபுரம்நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்காக அனுப்பப்பட்டவர்களாவர். (உ-5)

# கண்ணீர்ப் பூக்கள்

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் தவிக்கவிட்டு திடீரென மறைந்த அன்புத் தம்பி

செல்வன்

## இராஜகோபால கங்கேசன் (கங்கு)

(உயர்தர மாணவன்)

அவர்களின் பேரிழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமதுகண்ணீர்ப்பூக்களைகாணிக்கையாக்குகின்றோம்.

என். ராகுலன், என். ரவீந்திரா
கொக்குவில்.

(66091)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

திருமதி ஸ்ரீ ரஞ்சினி இராமநாதன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி

## திலகவதி விஸ்வலிங்கம்

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

(66083)

# மரண அறிவித்தல்கள்

## சிவசாமி சுப்பிரமணியம்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சிவசாமி சுப்பிரமணியம் 25-05-99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சாரதாதேவியின் அன்புக் கணவரும் ரஜனிகாந் (கல்விக் கல்லூரி, வவுனியா), ரவீந்திரன், சிவரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26-05-99) புதன்கிழமை காலை 10-30 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ரவீந்திரன்
[மகன்]

கலைவாணி லேன்,
கொக்குவில் கிழக்கு.

(66066)

## திருமதி முத்தையா பாக்கியம்

சுருவில் ஊர்காவற்துறையை பிறப்பிடமாகவும் கூமாங்குளம் வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா பாக்கியம் அவர்கள் 25-05-99 வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெருமாள் தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும் சரவணமுத்து சிவகாமிப் பிள்ளையின் மருமகளும் காலஞ்சென்ற முத்தையாவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, நாகரத்தினம், மாணிக்கம். சின்னத்துரை பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற லோகநாதன், கிருபானந்தநாதன் (ஜேர்மனி), விஜயரட்ணம் (விமலன்-கிராம அலுவலர், புளியங்கூடல்), சோதிநாதன் (இந்தியா), சிவநாதன், ஞானநாதன் (V. மாணிக்கம் பிறதர்ஸ் கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மாலினி (ஜேர்மனி), நீற்ரா (ஜேர்மனி), சாந்தினி (ஆசிரியை, யாழ் மத்திய கல்லூரி), ஜெயந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், பிரதீபா, லக்ஷ்மி பிரசாத், ரம்யா, அனிற்ரா, விதுஷன், பைரவி, பிரியங்கன், தினோஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-05-99) புதன்கிழமை கூமாங்குளம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கூமாங்குளம் இந்து மயானத்திற்கு பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
மு. விஜயரட்ணம்
(மகன்-கிராம அலுவலர்)

15/30, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
திருநெல்வேலி.

(66094)

# பெண்களுக்கு சேமிப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், மே 26

சேமிப்புப பழக்கத்தினை ஏற்படுத்தும் நோக்குடன் கெயர் நிறுவத்தினால் வரணி தாவளை, இபற்றாலை, பலாலி, பெரியபளை போன்ற இடங்களில் பெண்களுக்கான சேமிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இருநூறு பெண்கள் இந்தச் சேமிபபுத்திட்டத்தில் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் இணைந்துள்ளனர். சேமிப்பு முறை, இயக்கம், நிர்வாகம் மற்றும் அதன் பணிகள், எதிர்காலத்திட்டங்கள், உள்ளகக் கட்டுப்பாடு போன்ற தலைப்புகளில் மேற்படி பெண்களுக்குகெயர்நிறுவனத்தினரால் வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன. [இ-5]

# பாட நூல் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 26

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான — தரம் 6, தரம் 9 ஆகிய வகுப்புக்கான — பாடநூல்கள் இன்று காலை 9 மணிக்கு வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்படும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர்கள் சமுகமளித்துத் தமது பாடசாலைகளுக்கான புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (உ-3)

# நோயாளர் கப்பல்சேவை

யாழ்ப்பாணம், மே 26

கொழும்பில் மேலதிக சிகிச்சையைப் பெறச் செல்லும் நோயாளர்களை ஏற்றிக் கொண்டு செஞ்சிலுவை சர்வதேச குழுவின் கப்பல் இலது காங்கேசன்துறையில் இருந்து திருமலைக்குப் புறப்படவுள்ளது.

இக்கப்பலில் செல்வதற்காக பதிவு செய்த நோயாளர் மற்றும் அவர்களது உதவியாளர்களை இன்று காலை 7. 30 மணிக்கு முன் யாழ். ஆஸ்பத்திரிக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-15-139)

# நீர்கொழும்பில் சூட்டுச் சம்பவம்

கொழும்பு, மே 26

நீர்கொழும்புநகரில் நேற்று முன்தினம இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள் இருவரும் மாணவர் ஒருவரும் காயமடைந்தனர்.

இவர்கள் நகர வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த சமயம் எதிரே வந்த இனந்தெரியாதவர்கள் இவர்களைச் சுட்டுவிட்டுத் தப்பினர் எனக் கூறப்பட்டது. (உ-3-6-8)

# மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், மே 26

வட்டுக்கோட்டை துணவி அ. மி. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு செண். ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் பாடசாலை அதிபர் கா. சிவனேசன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரிவு I இன் உதவிக் கல்விப்பணிப்பாளர் சி. செல்லையாவும் சிறப்பு விருந்தினராக [illegible] கலந்து கொள்வர். (உ-6)

# காங்கேசன் முகாமில் 42பேர் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், மே 26

யாழ் குடாவில் பல பகுதிகளிலும் படையினரால் கைது செய்யப்பட்டவர்களுடன் நான்கு இந்திய மீனவர்களுமாக மொத்தம் 42 பேர் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தற்பொழுது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தடுப்பு முகாமிற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலக அதிகாரி செல்வி கௌரி சுந்தரலிங்கம் நேற்றுச் சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைச் சந்தித்து அவர்களின் சேம நலன் பற்றி உரையாடினார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள் கையளித்த கடிதங்கள் மற்றும் உணவுப் பொருள்களைக் கைதிகளிடம் வழங்கிய அந்த அதிகாரி, அவர்களிடம் இருந்து உறவினர்களுக்கான கடிதங்களையும் பெற்று வந்துள்ளார்.

வேலை நாள்களில் கைதிகளின் உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு நேரில் வந்து தமக்குரிய கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அவர் தெரிவித்தார். (உ-5)

# யாழ். ஆஸ்பத்திரிக்கு 21 தென்பகுதி டாக்டர்கள்

யாழ்ப்பாணம், மே 26

தெற்கில் இருந்து 21 டாக்டர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் முதல் இவர்கள் தமது பணியை ஆரம்பித்துள்ளனர்.

இவர்களில் 12 பேர் பெண் டாக்டர்களாவர்.

வெளி நோயாளர் பிரிவில் இந்த டாக்டர்கள் பணி புரிய ஆரம்பித்ததும் அந்தப் பிரிவில் நிலவிவந்த பற்றாக்குறை நிவர்த்தியாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-15)

# கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மே 26

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் ''உதயன்'' நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி யாழ் பல்கலைக் கழக ஆடுகளத்தில் இன்று ஆரம்பமாகின்றது.

இன்றைய ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:

★ 4 மணி — பெண்கள் பிரிவு — ஜெ லிஸ்ரார் வி. க. அணி எதிர் அரியாலை யூனியன் வி க அணி

★ 5 மணி — ஆண்கள் பிரிவு — சென்றலைட்ஸ் வி. க. அணி எதிர் பல்லைக்கழக அணி. (உ-3)

# மின்தூண்கள்

கொழும்புத்துறை, மே 26

கொல்புரம் வழக்கம்பரை வீதியில் இருந்து பாணாவெட்டி பிரதான வீதி வரை தற்போது மின் தூண்கள் நடப்பட்டு மின் இணைப்புக் கம்பிகள் பொருத்தப்பட்டு வருகின்றன. (க-50)

# நவாலியில் திருட்டு

நவாலி, மே 26

நவாலியில் ஆள்கள் இல்லாத வீடுகளில் மீண்டும் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் நவாலி சின்னப்பா வீதியிலுள்ள ஒருவரின் வீட்டின் ஜன்னல்களில் பொருத்தப்பட்டிருந்த 14 கிறில்களை இவர்கள் கழற்றிச் சென்றுள்ளதுடன் அதே இடத்திலுள்ள மற்றொருவரது வீட்டிலிருந்த ஓடுகளையும் கழற்றி எடுத்துள்ளனர். (இ-100)

# விடுவிப்பு

தென்மராட்சி, மே 26

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறபபடும் சாவகச்சேரி நகரப்பகுதி வர்த்தகர் நேற்று முன்தினம் இரவு வீடு திரும்பினார்.

சாவகச்சேரி தபால் கந்தோர் வீதியைச் சேர்ந்த கா. நவரத்தினம் என்னும் வர்த்தகரே அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப் பட்டவராவார். (உ-117)

# இளம் பெண் கைது

யாழ்ப்பாணம், மே 26

வன்னியில் இருந்து குடாக் கடல் ஊடாக படகு மூலம் வந்து குருநகர் சீநோர் முகாமில்தங்கியிருந்த இளம் பெண் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தூரைச் சேர்ந்த ஒரு குழந்தைக்குதாயான திருமதி ஞானம் உமா (வயது 28) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

தனது குழந்தை தமது தாயாருடன் வன்னியில் இருப்பதாகவும் —

அக்குழந்தையைத் தன்னுடன் சேர ஏற்பாடுசெய்து தர வேண்டும் என்றும் —

காங்கேசன்துறையில தற்சமயம் தடுத்து வைக்கப்பட்டுள்ள அந்தப் பெண் அங்கு உள்ள படை அதிகாரிகளிடம் கோரியுள்ளார். (உ-3-5)

# கலட்டியில...

(முதலாம் பக்கத் தொடர்)

சாவடிக்கு அருகில் உள்ள பாதுகாப்பு அரண் பகுதியில் விறகுத் தேவைக்காக மரக் குற்றிகளை அகற்றியபோதே மிதிவெடி வெடித்ததாகக் கூறப்பட்டது.

மற்றைய இளைஞன்காயம் ஏதுமின்றித் தப்பினார்.

காயமடைந்த இளைஞன் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளானர் (உ 7 15-139)

# கண்ணீர் அஞ்சலி

எமது கழகத்தின்
ஆரம்பகால உறுப்பினர்

லயன் ஆ. மகாலிங்கம்
(பிரதேச செயலர், உடுவில்)

அவர்களின் மாமியார்

## திருமதி கணபதிப்பிள்ளை மீனாட்சிப்பிள்ளையின்

பிரிவினால் துயருறும் அவரின் குடும்பத்தவர்கட்கு எமது இதய அஞ்சலி உரித்தாகுக

உறுப்பினர்கள்
லயன்ஸ் கழகம்
சுன்னாகம்

(66087)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்)

பெர்னாண்டோ, வண கும்புறுகேவ வஜிரதேரர் ஆகியோர் உரையாற்றினர்.

வஜிரதேரர் அங்கு உரையாற்றுகையில்—

''கழுத்தில் சயனைட் குப்பியை கட்டிக் கொண்டு ஆயுதம் தாங்கி'' போராடுபவர்கள் ஏன் போராட்டம் நடத்துகிறார்கள் என்பதை சகலரும் சிந்திக்க வேண்டும், அவர்களின் போராட்டத்திற்கு அடிப்படையான காரணமாக இருக்கும் அவர்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற சகலரும் தங்கள் பங்களிப்பை வழங்க வேண்டும்—என்றார்.

சர்வமதக் குழு இன்று தச்சனார்மருதமடுவுக்குச் சென்று வைத்திய முகாம் ஒன்றை அங்கு நடத்தவிருக்கின்றது.

(உ-164-3)

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்று முன்தினம் இக் கப்பலில் அழைத்து வரப்பட்ட ஆயிரத்து 250 பேரும் நேற்று காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்தனர்.

இங்கிருந்து 294 பேருடன் கப்பல் திருகோணமலைக்கு நேற்றுப் புறப்பட்டது.

(உ-3-17-86-139)

இன்றைய
CD வெளியீடு!
பிரபு - தேவயானி
வடிவேலு நடித்த
கும்மிப்பாட்டு
ஆர்க்
வீடியோ லைபிறறி
51, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
Phone:- 2364
(66092)

# புளொட் உறுப்பினர்கள் இருவர் விளக்க மறியலில்!

யாழ்ப்பாணம், மே 26

இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தில் புளொட் உறுப்பினர்களின் பெயர்களில் இடம்பெற்றதாகக் கருதப்படும் குளறுபடி காரணமாக அந்த அமைப்பின் இரு உறுப்பினர்கள் யாழ். நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

புளொட் அமைப்பின் காவலில் இருந்த சமயம் தாம் தாக்கப்பட்டதாகத் தெரிவித்து அனுராதபுரத்தைச் சேர்ந்த அப்துல் அஸீஸ் என்பவர் யாழ். பொலீஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தார்.

இது தொடர்பாக விசாரணை செய்த பொலீஸார் புளொட் அமைப்பைச்சேர்ந்த ஏழு உறுப்பினர்களைக் கைது செய்து யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருந்தனர்.

பின்னர் இவர்கள் பிணையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் ஒருவரின் பெயரில் வேறு ஒருவரும் அந்த அமைப்பில் இருப்பதாகப் பொலீஸாரின் விசாரணையில் தெரிய வந்ததையடுத்து அந்த உறுப்பினரையும், ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்ட அதே பெயரையுடைய உறுப்பினரையும் கைது செய்த பொலீஸார் நேற்றுமுன்தினம் இருவரையும் யாழ். நீதிமன்றபதில் நீதிவான் க. கேசவன் முன் ஆஜர் செய்தனர்.

ஏற்கனவே பிணையில் அனுமதிக்கப்பட்ட உறுப்பினரை அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரையிலும் —

மற்றையவரை அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரையிலும் — விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

(உ-3-5)

## பெருமாளை...

[முதலாம் பக்கத் தொடர்]

படுகின்றது.

1989 ஆம் ஆண்டு ஈழப் பிரகடனத்துடன் நாட்டை விட்டு வெளியேறியமை —

1999 இல் ஈழப் பிரகடனத்தைக் கைவிட்டு அரசின் தீர்வுப் பொதியைத் தலையில் சுமத்தல்—

போன்றவை தொடர்பான கேலிச்சித்திரங்கள் அந்தச் சுவரொட்டிகளில் காணப்பட்டன.

(உ-21-3)

நியூ விஷ்ணு
திரையரங்கு
இணுவில் மேற்கு
பிரபு - தேவயானி
நடித்த
கும்மிப்பாட்டு
காட்சிகள்: 10-30, 2 30
(66093)

## முத்தமிழ் விழா

யாழ் புனித மரியாள் வித்தியாலயத்தின் முத்தமிழ் விழா இன்று காலை 9-30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை முதன்மை விருந்தினராகவும் யாழ். கல்விக்கோட்டத்தின் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ. சி. வேலாயுதம் சிறப்பு விருந்தினராகவும் அடைக்கல அன்னை ஆலய அருட் தந்தை ஞா. பிலேந்திரன் கௌரவ விருந்தினராகவும் கல்வி உயர் கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜீ. பி. அல்பிறட் விசேட விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

(உ-51)

## இந்திய கிரிக்கெட் அணிக்கு

# அதிக பாதுகாப்பு தர கோருகின்றார் அஸார்!

## இன்று முக்கிய ஆட்டம்

லண்டன், மே 26

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ளும் தனது அணிக்கு கூடுதலான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று இந்திய அணித் தலைவர் மொகமட் அஸாருதீன் போட்டிஏற்பாட்டாளர்களிடம் கோரியுள்ளார்.

இன்று நடைபெறும் இலங்கை — இந்திய அணிகளுக்கிடையிலான ஆட்டத்தின் போது ரசிகர்கள் பிரச்சினைகளைக் கிளப்பக் கூடும் என்றும்—

இதனால் தனது அணிவீரர்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அஸாருதீன் கோரியுள்ளார்.

கிரிக்கெட் வீரர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாவிட்டால் தனது அணிசுற்றுப் போட்டியில் இருந்து விலகிவிடும் என ஆஸ்ரேலியா தெரிவித்திருந்தது. இதனை அடுத்து அஸாருதீனின் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து —

ரசிகர்கள் ஆடுகளத்துக்குள் நுழைவதைத் தடுக்க அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இங்கிலாந்து அரசாங்கத்தை ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர்

இன்று நடைபெறும் இலங்கை — இந்தியா அணிகளுக்கிடையேயான போட்டி மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இதில் தோல்வியடையும் அணி அடுத்த சுற்றில் விளையாடுவதற்கான தகுதியை இழக்கும். எனவே தோல்வி அடையும் அணியின் ரசிகர்கள் தகாத நடவடிக்கைகளில் ஈடுபடலாம்என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

1995 ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியுறும் நிலையில் இருந்த போது ரசிகர்களின் குழப்பங்கள் காரணமாக ஆட்டம் கைவிடப்பட்டு இலங்கை வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

[உ-6]

## இங்கிலாந்து வெற்றி

லண்டன், மே 26

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் 7 வது உலகக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து அணி சிம்பாப்வே அணியை 7 விக்கெட்டுக்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் ஆடிய இங்கிலாந்து அணி 39 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களைமட்டும் இழந்து 168 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

(உ-6)

# 'ஜி-8' நாடுகளின் யோசனைகளை ஏற்பதற்கு யூகோஸ்லாவியா தயார்

பெல்கிரேட், மே 26

ஜி.8 நாடுகள் முன்வைத்ததிட்டத்தின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் நடத்த நாம் தயாராக உள்ளோம். ஆனால் நேட்டோ தான் சமாதானத்துக்காக யுத்தம் என்ற தவறான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கின்றது.

மேற்கண்டவாறு யூகோஸ்லாவிய அதிபர் மிலோசெவிக் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை— ஒன்பதாவது வாரமாக யூகோ மீதான நேட்டோவின் வான் தாக்குதல்கள் தொடருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொசோவோவின் இஸ்ராக் பகுதியில் உள்ள சிறைச்சாலை மீது நேட்டோ விமானங்கள் தாக்குதல் நடத்தியதில் நூறு கைதிகள் வரை கொல்லப்பட்டனர். இருநூறு பேர்வரையில் காயம் அடைந்தனர்.

நேட்டோவின் வான் அச்சுறுத்தல்களினால் இறந்தவர்களை அப்புறப்படுத்த முடியாமலும், காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடியாதும் உள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் நேட்டோவின் வான் தாக்குதல்களை நிறுத்துமாறு இந்தியா, ரஷ்யா, சீனா என்பவை கூட்டாகக் கேட்டுள்ளன.

(இ-க)

# நிலக்கரி சுரங்க விபத்தில் 35 பேர் பலி!

மொஸ்கோ மே, 26

கிழக்கு உக்ரெயினின் தென் பகுதியில் உள்ள நிலக்கரிச் சுரங்க எரிவாயு வெடி விபத்தில் 35 பேர் வரை உயிரிழந்துள்ளனர். 36 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

நேற்று முன்தினமே இந்தச் சம்பவம் இடம் பெற்றது-

பல சுரங்கத் தொழிலாளர்கள் சுரங்கத்திலிருந்து வெளிவர முடியாமல் உள்ளனர். எனவே உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிரிக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. மீட்புப் பணிகள் முழு வீச்சுடன் நடத்தப்படுகின்றன.

(இ-க)

## மேலும்...

[முதலாம் பக்கத் தொடர்]

தன.

வடமராட்சிப் பகுதியில் அரச அலுவலகங்கள் தடையின்றி இயங்கின.

வலிகாமம், தென்மராட்சிப் பகுதிகளில் அவை செயல் இழந்திருந்தன.

யாழ். அரச அதிபர் மற்றும் அரச திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களின் பிரதிகள் நேற்று இலங்கை வங்கி மக்கள் வங்கி போன்ற அரச வங்கிகளுக்கும்கிடைத்திருப்பதாகத் தெரியவந்தது.

(உ-3-5-7-15-17-86-139-173-175)

## கருத்தரங்கு

வடமராட்சி, மே 26

வடமராட்சி லயன்ஸ் கழகமும் பருத்தித்துறை பிரதேச சபை சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து பாலர் ஆசிரியர்களுக்கான முகாமைத்துவக் கருத்தரங்கு ஒன்றினைப் பருத்தித்துறையில் உள்ள வடமராட்சி நல்லொழுக்க நிறுவன மண்டபத்தில் இம்மாதம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தவுள்ளன.

[173]

JAFFNA
TECHNICAL INSTITUTE
Reg No; 15251
JAFFNA, SRI LANKA.
தொழிற் பயிற்சிகள்

RADIO, TV and VIDEO DECK REPAIRING
சகல இன றேடியோ, ரீவி, விடியோ டெக் மற்றும் எலெக்ரோனிக் உபகரணங்கள் என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
( காலம் 9 மாதங்கள் )

MOTOR REWINDING and ELECTRICAL WIRING
சகல இன மோட்டார், (F) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின் இணைப்பு முறை என்பன பயிற்சியளிக்கப்படும்.
( காலம் 6 மாதங்கள் )

MOTOR CYCLE MECHANISM
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
( காலம் 5 மாதங்கள் )

AIR CONDITIONING and REFRIGERATION
சகல இன குளிர்சாதனப்பெட்டி மற்றும் ஏயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
( காலம் 6 மாதங்கள் )

CITY and GUILDS of LONDON EXAM
(I) POWER (II) ELECTRONICS

SPECIAL ENGLISH CLASSES
1) TOEFEL
2) SPOKEN ENGLISH with GRAMMER
3) N C E
4) P E T

புதிய பயிற்சிகள் ஆரம்பம்
02 - 06 - 1999 (கிழமை நாள்களில்) 06 - 06 - 1999 (சனி, ஞாயிறு நாள்களில்)
NOTE: தொழிற்பயிற்சிகள் முடித்த மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு நேரில்
- DIRECTOR
52/1, STANLEY ROAD, JAFFNA.
( றெயில்வே கடவை அருகில் )
No. 7, PALALY ROAD, JAFFNA.
(66072)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26-05-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org